சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R.பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாள் செவ்வாய்கிழமை

C.M.A.No.1/2026 in

E.A.No.4/2024 in
E.P.No.21/2019 in
O.S.No.150/2016

**CNR No. TNSV030007042025**

**...**

மீனாட்சி ...மேல்முறையீட்டாளர்/ மனுதாரர்/மனுதாரர்

..எதிர்..

1) மாணிக்கம் ....எதிர்மேல்முறையீட்டாளர்/ 1-ம் எதிர்மனுதாரர்/வாதி

2) சீதாலெட்சுமி
3) சுருளிவாசன் ...எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ 2, 3 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இந்த பல்வகை மேல்முறையீடுதாரர் சிவகங்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.150/2016 என்ற வழக்கில் E.P.No.21/2019-ல் 09.10.2025ம் தேதி பிறப்பித்த உத்தரவின் மீது இந்த சிவில் பல்வகை மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மீனாட்சி ... மனுதாரர்/மனுதாரர்

..எதிர்..

1) மாணிக்கம் ... 1-ம் எதிர்மனுதாரர்/வாதி

2) சீதாலெட்சுமி
3) சுருளிவாசன் ... 2, 3 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 03.01.2026-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 17.02.2026 அன்று என் முன்னிலையில் இறுதி விசாரணைக்காக வந்த போது மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.G.விஜய் ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், 1-ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.R.விஜயக்குமார் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மேல்முறையீட்டாளர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர்கள் ஆஜராகாததால் அவர்களை ஒருதலைபட்சமாக தீர்மானித்தும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரையை கேட்டும் இதுநாள் வரை இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

<u>உத்தரவு</u>

இம்மேல்முறையீட்டினை அனுமதித்து, சிவகங்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இ.ம.எண்.21/2019-ல் 09.10.2025ம் தேதி வழங்கிய உத்தரவை ரத்து செய்து மேல்முறையீட்டாளர் கீழமை நீதிமன்றத்தின் மனுவில் (இ.ஏ.எண்.4/2024 உரிமை கோரிக்கை மனு) கோரியுள்ள பாகாரத்தை வழங்கி உத்தரவு பிறப்பிக்கக் கோரி இந்த மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>விசாரணை நீதிமன்றத்தின் மனுவின் சுருக்கம்-</u>**

தாவா சொத்தானது உங்கு என்பவரின் பூர்வீக சொத்து என்றும், மேற்படி சொத்தை உங்கு தனது சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்தார் என்றும், உங்கு மனைவி கன்னியம்மாள் என்றும், அவர்களுக்கு கண்ணன், முனியாண்டி, மீனாட்சி, கண்ணன், கண்ணாத்தாள் மற்றும் மாணிக்கம் ஆகியோர்கள் வாரிசுகள் என்றும் உங்குவின் பிள்ளைகள் திருமணம் முடிந்து தனியாக வாழ்ந்து வருகிறார்கள் என்றும், 40 வருடங்களுக்கு முன்பு உங்கு இறந்துவிட்டார் என்றும் உங்கு இறப்பிற்கு பின்பு மனு சொத்தானது அவரது மனைவி மற்றும் பிள்ளைகளால் கூட்டாக அனுபவித்து வரப்பட்டது என்றும் தாவா மனுதாரர் கீழப்பூங்குடி கிராமத்தில் வசித்து வருகிறார்கள் என்றும் தாவா சொத்தை அடிக்கடி பார்த்து செல்வார் என்றும் 10.04.2023 அன்று தாவா சொத்தை பார்வையிட்டபோது தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விபரம் மனுதாரருக்கு தெரிய வந்தது என்றும், தாவா மனு சொத்தைப்பொறுத்து நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் அருகிலுள்ள நபர்கள் மூலம் மனுதாரருக்கு தெரிய வந்தது என்றும் இது குறித்து

மனுதாரர் வழக்கறிஞரிடம் கலந்து ஆலோசித்தபோது அசல் வழக்கானது மோசடியாக கூட்டு சேர்ந்து மனுதாரருடைய சொத்தை மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மனுதாரருடைய பங்கு சொத்தையும் சேர்த்து சுவாதீன ஒப்படைப்பு உத்தரவிடுவது சட்ட முரணான ஒன்று என்றும் மனு சொத்தில் மனுதாரருக்கு 1/6 பங்கு பாத்தியம் உள்ளது என்றும் எனவே தாவா மனுவானது மனு சொத்தை சுவாதீன ஒப்படைப்பு செய்திடும்பொழுது மனுதாரருக்குரிய 1/6 பங்கு பாக சொத்தை விலக்கிடவேண்டுமாய் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **விசாரணை நீதிமன்றத்தின் 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்-**

மனுதாரர் தனது வயது, பிறந்த விபரம் மற்றும் திருமணம் முடிந்த வருடம் ஆகியவற்றை வேண்டுமென்றே சொல்லாமல் மறைத்துள்ளார் என்றும் மனுதாரர் அவருடைய தந்தையான உங்கு மற்றும் தாயாரான கன்னியம்மாள் ஆகியோர்கள் எந்த வருடம் இறந்தார்கள் என்பது குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் மனு சொத்தானது பூர்வீக சொத்து என்ற சங்கதியை 1ம் எதிர்மனுதாரர் மறுக்கிறார் என்றும் உங்கு என்பவர் இறப்பிற்கு பின்பு மனு சொத்தானது கூட்டு சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்யப்பட்டதாக சொல்லும் சங்கதி உண்மையல்ல என்றும் மனு சொத்து மற்றும் அதனுடன் சேர்ந்த மற்ற சொத்துக்கள் உங்கு என்பவரின் பூர்வீக சொத்து என்றும் 1986-ம் வருடம் உங்கு என்பவர் இறந்த பிறகு மனு சொத்தைப் பொறுத்து வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டது என்ற சங்கதியை மனுதாரர் மறைத்துள்ளார் என்றும் பங்குதாரர்களின் பங்கு சொத்தைப் பொறுத்து 2003ம் வருடத்திற்கு முன்பே பட்டா மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் மனுதாரர் தது மனுவில் சர்வே எண்.20/3-ல் கண்ட முழு சொத்தையும் குறிப்பிடாமல் 1ம் எதிர்மனுதாரருக்கு பாகத்தில் கிடைத்த பாக சொத்தை குறித்து மட்டும் பரிகாரம் கோரியுள்ளார் என்றும் மனுதாரர் கோரும் பரிகாரமாக முழு சொத்திற்காக இருக்கவேண்டும் என்றும் 10.04.2023-ம் தேதியன்று அசல் வழக்கு விபரம் மனுதாரருக்கு தெரிய வந்ததாக மனுதாரர் சொல்வது உண்மையல்ல என்றும் மனுதாரருக்கு மனு சொத்தில் 1/6 பங்கு பாகம் உள்ளதாக இருந்திருந்தால் அதற்கு தனி வழக்கு தாக்கல் செய்து அவர் நடவடிக்கை எடுத்திடவேண்டும் என்றும் மனுதாரர் முழு சொத்திற்குமாக முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை கோரி மனு தாக்கல் செய்யவேண்டும் என்றும் மனு சொத்தைப்பொறுத்து மட்டும் 1/6 பங்கு பரிகாரம்

கேட்டிட இயலாது என்றும் எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கட்டளை 21 விதி 26-ன் கீழ் தீர்ப்பு கடனாளி மட்டுமே தீர்ப்பாணை தடை செய்திட பரிகாரம் கேட்டிட இயலும் என்றும் அதன் அடிப்படையில் மனுதாரர் தாக்கல் செய்த தடை மனுவும் ஏற்புடையதல்ல என எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) <u>விசாரணை நீதிமன்றத்தின் 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம்-</u>**

மனுதாரர் மற்றும் 2, 3 எதிர்மனுதாரர்கள் உறவினர்கள் என்றும் மனு சொத்தில் 20 வருடங்களுக்கு முன்பு 2, 3 எதிர்மனுதாரர்கள் வீடு ஒன்றை கட்டியுள்ளனர் என்றும் மேற்படி வீடானது 1ம் எதிர்மனுதாரரின் சம்மதத்தின் பேரில் கட்டப்பட்டது என்றும் 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களை மோசடி செய்து 1ம் எதிர்மனுதாரர் தீர்ப்பாணை பெற்றுள்ளார் என்றும் மனுதாரருக்கு உரிய பங்கை கேட்காமல் 1ம் எதிர்மனுதாரர் இருப்பது 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு தற்போது தான் தெரிய வந்தது என்றும் மனு சொத்தில் பங்கு கேட்பதற்கு மனுதாரர் கால வரம்பு தடை சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளார் என்ற சங்கதி ஏற்புடையதல்ல என்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5) <u>மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்-</u>**

கீழமை நீதிமன்றத்தில் E.A.No.4/2024-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு சரியான சட்ட நிலைப்பாடுகளுக்கு ஏற்பவும், மனு விசாரணையில் கண்டறியப்பட்ட உண்மை காரணங்களின் அடிப்படையிலும், வழக்கின் தன்மைக்கும் ஏற்றவாறு உள்ளது. மனுதாரர் கீழமை நீதிமன்றத்தில் பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் 1 முதல் 4 ஆவணங்களை சரிவர பரிசீலனை செய்த பின்பே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்துள்ளது. பிராதுடன் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணம் தாவா சொத்தின் பட்டா மாறுதல் உத்தரவு 1ம் எதிர்மேல்முறையீட்டாளரால் ஏற்கனவே அசல் வழக்கில் கீழமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, கீழமை நீதிமன்றம் உரிய முறையில் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆவணமாகும். மேற்படி ஆவணம் தமிழக அரசின் வருவாய்துறையினரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு ஆகும்.

1ம் எதிர்மேல்முறையீட்டாளரும், அவர் உடன்பிறந்த இதர சகோதரர்களின் மனுவின் பேரில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவாகும். மேற்படி உத்தரவில் எவ்விதமான சட்டத்திற்கு முரணான சங்கதிகள் ஏதும் இல்லை. மேற்படி வருவாய்துறையினரின் உத்தரவு சட்டநிலைப்பாடுகளின்படியும் சட்டப்படியும் பிறப்பிக்கப்பட்ட உத்தரவாகும். மேலும் மனுதாரர் பிராதுடன் தாக்கல் செய்துள்ள மற்ற ஆவணங்களான மனுதாரரின் ஆதார் அட்டை மற்றும் வம்சாவழி ஜாபிதாக்களையும் கீழமை நீதிமன்றம் கருத்தில் கொண்டே உத்தரவு பிறப்பித்து உள்ளது.

கீழமை நீதிமன்றம் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் கூறியுள்ள விஷயங்களை நன்கு பரிசிலனை செய்து, உத்தரவில் உரிய முறையில் விளக்கம் கொடுக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் உடன்பிறந்த சகோதரர்கள் நால்வரும் அவர்கள் குடும்பமும் சிவகங்கை - கீழமேடு அரசநேரி கிராமத்தில் குடியிருந்து வருவதால், கடந்த 40 ஆண்டுகளாக தன் சகோதரர்கள் வீட்டு திருமண வைபவங்கள், சுபநிகழ்ச்சிகள், துக்க நிகழ்ச்சிகள் என எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள தகாத மனுதாரர் கீழமேடு - அரசநேரி கிராமத்திற்கும் இதன் அருகாமையில் உள்ள தாவா சொத்து அமைந்துள்ள காஞ்சிரங்கால் குரூப் பகுதிக்கும் அடிக்கடி வந்து போவார் என்பதும் இவ்வழக்கு O.S.No.150/2016, ஆனது தொடர்ந்த 2016-க்கு பின்பும் தங்கள் சகோதரர்கள் வீட்டு விசேஷங்களுக்கும் வந்துள்ளார் என்பதும், வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே வழக்கு உள்ள விபரம் மனுதாரருக்கு ஆரம்ப நிலையிலிருந்தே தெரியும். இந்த O.S.No.150/2016 வழக்கு தொடர்ந்து பின்பு சில வருடத்தில் இந்த O.S.No. 150/2016 வழக்கு எதிர்வாதிகள் வீட்டில் நடந்த திருமணத்திற்கும் மனுதாரர் வந்து சென்றுள்ளார். எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் உடன்பிறந்த சகோதரரின் மகள் மற்றும் மருமகன் ஆவர்.

மனுதாரருக்கு முதலில் தாவா சொத்துடன் சேர்ந்த சர்வே எண். 20/3-ல் 1/6 பாகம் உள்ளதா? சட்டப்பூர்வமாக கிடைக்கக்கூடியதா? என்பதை முதலில் தனிவழக்காக போட்டு தீர்மானம் செய்ய வேண்டும். மனுதாரருக்கு 1/6 பாகம் உள்ளதா என்பதை இந்த E.P. மனுவில் தீர்மானிக்க முடியாது. ஏனெனில் Execution Court cannot go be beyond the Decree and Judgement of Trial Court. எனவே தகதா மனுவில் தனி வழக்கு போட்டுதான் தீர்மானிக் முடியும். அவ்வாறு மனுதாரர் தனி வழக்காக partition suit செய்து அந்த வழக்கில் மனுதாரருக்கு preliminary decree-

யும் final decree-ம் சித்திக்குமானால் ஒட்டு மொத்த 0.83 நிலத்திலும் சேர்த்து தான் 1/6 பாகம் பிரிக்க முடியுமே தவிர இந்த எதிர்மனுதாரரின் தாவா நிலத்தில் மட்டும் 1/6 பாகம் பிரிக்க முடியாது. எனவே மனுதாரருக்கு மொத்த சொத்திலும் 1/6 பாகம் உள்ளதா என்று தனிவழக்கு தொடர்ந்து அதில் மனுதாரருக்கு சாதகமாக தீர்ப்பு வந்தபின்பு தான் எந்த ஒரு மனுவையும் போட முடியும். இந்த E.P. மனுவில் இப்போது இதுபோன்ற மனுக்கள் அனுமதிக்கத்தக்கதல்ல.

நமது Hindu Succession Act 2005-ன்படி சொத்துக்கள் பிரிவினை செய்யப்பட்டிருந்தால் அந்த சொத்துக்களில் பெண்கள் பாகம் கோரி வழக்கு போட முடியாது என சொல்லப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மனுதாரரின் தகப்பனார் உங்கு 1986-ல் இறந்து வாய்மொழியாக சகோதரர்களுக்கு இடையே பாகப்பிரிவினை செய்யப்பட்டு வருவாய்துறை ஆவணங்களிலும் உரிய மாறுதல்கள் 2003-ம் ஆண்டே செய்யப்பட்டு தனித்தனி பட்டா மாறுதல் செய்யப்பட்டதோடு அனைத்து சகோதரர்களும் அன்றே அவரவர் பாகங்களை அனுபவம் எடுத்துக் கொண்டு இன்றுவரை அனுபவத்தில் இருந்து வருகின்றார்கள் என்பதால் தகதா மனுவில் பாகம் கோரி மனு செய்வதிலிருந்து விலக்கப்படுகின்றார்.

மேலும் ஒருவேளை தகதா மனுதாரருக்கு 1/6 பாகம் உரியது என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும் பட்சம் தாவா சொத்து எதிர்மனுதாரர்கள்/வாதிகள் அனுபவத்தில் இருந்தால்தான் மனுதாரருக்கு உரிய பங்கு பிரித்து அளிக்க முடியும். அதை விடுத்து ஆக்கிரமிப்பாளர்களான எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளிடம் அனுபவம் இருக்கும் மனுதாரர் 1/6 பாகம் அடைய விரும்பினால் இந்த EP delivery-ஐ தடை செய்ய வேண்டுமென்று கோரக்கூடாது. ஆனால் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால்தான் இந்த தடை கோரிய மனுவும், தகதா மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் A.V. Hanifa Vs Salima Bhanu AIR 1992 Madras 111 & 112 என்ற வழக்கில் அசல் வழக்கில் எழுப்பப்பட்டு தீர்மானிக்கப்படாத விபரங்கள்/சங்கதிகள் S.47(1)-ன் கீழ் எழுப்ப இயலாது. Refer questions which were not raised in Suit and decided Trial Court என தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் (2008) 66 AIC 676 (cri) Pravat Chanda Pattnaik Vs Sarst Chandra Pattiak என்ற வழக்கில் "daughters will get rights in co-parceners only after 09.09.2005 irrespective of fact they were born earlier" என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. Hindu Succession Act operates from the date of death of

estate holder 1993 Supp (1) SCC 233 Revathinnal Varma Vs Pad Mabha Dask Vodc Varma என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் அப்பா உங்கு 1986-ல் இறந்து வீட்டார் என்பது கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

S.6. Hindu Succession Act 2005 - Provided nothing contained in this sub-section state affect or invalidate any disposition or alienation including any partition or testamentary disposition of property which had taken place before 20th day December 2004 என்றும் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இதேபோல் claim petition is not application when the surviving members of coparceny had already partitioned their properties and became owners to the extent of their share என்று (2008) 3 SCC 87 Bhanwor Singh Vs Puran என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் counter claim by Judgment debtor cannot be raised in Execution proceedings என்று Harnam Singh Va Anabindunath AIR 200 P & H Page 210-ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது. Objection that property was joint family property raised for the first time before execution court was not tenable என்று AIR 2007 on 168 - Dokisurya Prakash Ruo Vs Gopal Krishna Dolai என்ற வழக்கில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.எனவே மேலே கூறப்பட்ட காரணங்களினால் இந்த மனுவை இந்த Execution Court-ல் தாக்கல் செய்ய மனுதாரருக்கு அருகதை கிடையாது.

மனுதாரருக்கு முதலில் 1/6 பாகம் உள்ளதா என்பதை மற்ற co-parcener-களையும் அவர்கள் பாகத்தையும் சேர்த்து தனி வழக்கு நடத்தி தான் தீர்மானிக்க முடியுமே தவிர இந்த மனுவில் இந்த Execution Court-ல் தீர்மானிக்க முடியாது. எனவே இந்த EP மனுவில் delivery-ஐ stay செய்து நிறுத்தி வைக்க வேண்டிய அவசியம் ஏதும் சட்டப்படி எழவில்லை என்பதால் மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமும் நியாயமுமாய் உள்ளது. வாய்மொழி பாகப்பிரிவினையை ஏற்றுக்கொள்ளலாம் என்று Hindu Succession Act-ல் தெளிவாக கூறப்பட்டுள்ளது. மகள்களின் பூர்வீக சொத்துரிமை என்பது எப்போது நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மேலேகண்ட பத்திகளில் கூறப்பட்டுள்ள உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புகள் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. மேலும் Hindu Succession Act 2005-ல் சொல்லப்பட்டுள்ள விபரங்களின் சட்ட

அடிப்படையில் 1-ம் எதிர்மேல்முறையீட்டாளரின் வாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு கீழமை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே கீழமை நீதிமன்றத்தின் உத்தரவில் எவ்வித சட்ட முரண்பாடுகளும் இல்லை.

மனுதாரர் எப்போது பிறந்திருந்தாலும் 2004-ம் ஆண்டுக்கு முன்பு ஆண்மக்களிடையே பாகப்பிரிவினை செய்யப்பட்டு, வருவாய் ஆவணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், இந்த ஏற்பாட்டினை பெண்மக்கள் கேள்விக்கு உள்ளாக்க முடியாது என்பதே சட்ட நிலைப்பாடாகும். கீழமை நீதிமன்றம் வினித் சர்மா Vs ராஜேஷ் சர்மா (2020) 9 SCC 1 என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் வகுத்துள்ள சட்டக் கொள்கையை கீழ் நீதிமன்றம் சரியாக புரிந்து கொண்டு தான் உத்தரவு பிறப்பித்துள்ளது. வாய்மொழி பாகப்பிரிவினையினை எல்லா சகோதரர்களும் ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் எல்லா சகோதரர்களும் பட்டா மாறுதல் உத்தரவு கோரி மனு செய்ததின் அடிப்படையில் பட்டா மாறுதல் உத்தரவு செய்யப்பட்டுள்ளது. வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்யப்பட்டு அது பங்குதாரர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பாகப்பிரிவினை நடைமுறைப்படுத்தப்பட்டாலே பாகப்பிரிவினை முழுமையடைந்து விடும்.

மேல்முறையீட்டாளார் கட்சிக்காரராக இல்லாத ஒரு வழக்கின் தீர்ப்பினை பற்றி கேள்வி எழுப்ப இந்த மேல்முறையீட்டாளருக்கு எவ்வித உரிமையும் இல்லை. 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் உயர்நீதிமன்றம் வரை வழக்காடி கீழமை நீதிமன்றம் O.S.No.150/2016-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு செல்லும் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 2016-லிருந்து 2023 வரை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்வரை எந்தவிதமான இடையீட்டு மனுவும் செய்யாமல் O.S.No.150/2016-ல் உள்ள E.P.No. 21/2019-ல் delivery உத்தரவு பிறப்பித்த பிறகு மனுதாரரால் இந்த தகதா மனு செய்யப்பட்டு கீழமை நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் AIR 2007 Page 168 – Dokisurya Prakash Rao Vs Gopal Krishna Dolai என்ற வழக்கின் தீர்ப்பின்படி that the property was joint family property raised for the first time before execution court was not tenable என கூறப்பட்டுள்ளது. இந்த மேல்முறையீட்டாளரும் E.P. 21/2019-ல் delivery order பிறப்பிக்கப்பட்ட பின்பு, 2, 3 எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு உதவ வேண்டும் என்றும் delivery-யை stay செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனும் அசல் வழக்கு 150/2016 மற்றும் இது தொடர்பான மேல்முறையீட்டு வழக்குகளில் இடையீட்டு மனு செய்து எவ்வித

உத்தரவும் பெறாமல் கீழமை நீதிமன்றத்தில் delivery stage-ல் தான் மனு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே கீழமை நீதிமன்றம் மேல்முறையீட்டாளரின் மனுவை தள்ளுபடி செய்துள்ளது.

பூர்வீகச் சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை செய்யப்படாமல் ஒரு கூட்டாளி மட்டும் சுவாதீனத்தில் இருந்தால் அது அனைத்து கூட்டாளிகளின் சுவாதீனமாக கருதப்படும் என்று வாதிடப்பட்டுள்ளது. ஆனால் இவ்வழக்கில் பூர்வீக சொத்து 1986-ல் உங்கு இறந்தபின்பு வாய்மொழியாக சகோதரர்கள் தங்களுக்குள் பாகப்பிரிவினை செய்து அனுபவம் செய்து வந்துள்ளனர். இங்கு தனி ஒரு நபர் மட்டும் அனுபவம் செய்யவில்லை. பாகப்பிரிவினைக்குப் பின் சகோதரர்கள் அனைவரும் அவரவருக்கு வழங்கப்பட்ட பங்கினை அவரவர் அனுபவம் செய்து வந்துள்ளார்கள். பின் சகோதரர்கள் அனைவரும் கூட்டாக மனு செய்து தங்கள் தகப்பனார் உங்கு பெயரிலிருந்து தங்கள் நால்வர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்தும் பின்பு அவரவருக்கு தனித்தனி பட்டாவும் பெற்றுள்ளனர் என்பதை மனுதாரர் மிகவும் கவனமாக மறைத்து மனு செய்துள்ளார். மேலும் 2004-க்கு முன்பே பட்டா மாறுதல் செய்யப்பட்டு அதற்கு முன்பே செய்யப்பட்ட பாகப்பிரிவினை அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது. வருவாய் ஆவணங்களில் பட்டா மாறுதல் செய்வதே அவர்களின் அனுபவத்தை அங்கீகாரம் செய்வதாகும். மேலும் ஒரு நபர் கோரும் பரிகாரத்தை பெற அவர் கூறும் சங்கதிகளை அவர்தான் நிரூபணம் செய்ய வேண்டும். மேல்முறையீட்டாளர் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்தார் என்பதையும், அவரை சட்டப்பூர்வமான சொத்திலிருந்து வெளியேற்றப்பட்டார் என்பதையும் மேல்முறையீட்டாளர் தான் நிரூபிக்க வேண்டும் என்ற கீழமை நீதிமன்றத்தின் நிலைப்பாடு சட்டப்படி சரியானதே. அதை 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் நிரூபிக்க வேண்டும் என்பது சட்டநிலைப்பாட்டிற்கு எதிரானதாகும்.

மேல்முறையீட்டாளர் சர்வே எண்.20/3-ல் உள்ள முழு சொத்திலும் தனது பங்கை கோராமல், வழக்கு சொத்தில் மட்டுமே 1/6 பங்கை கோரியுள்ளார் என்ற தொழில் நுட்ப காரணத்திற்காக மனுவை தள்ளுபடி செய்திருப்பது கீழமை நீதிமன்றத்தின் சரியான உத்தரவாகும். தனது பூர்வீக சொத்து முழுமைக்கும் சேர்த்தே மேல்முறையீட்டாளருக்கு 1/6 பாகம் கோர முடியும். ஏற்கனவே பாகப்பிரிவினை செய்த சொத்தில் தனியே 1/6 பாகம் கோரி உரிமை கோர முடியாது.

ஒட்டுமொத்த சொத்தில்தான் உரிமை கோர முடியும். இதனை கீழமை நீதிமன்றம் சரியாக உணர்ந்து சரியாக தீர்ப்பு வழங்கி உள்ளது. நிறைவேற்று நீதிமன்றத்தில் பூர்வீக சொத்தின் முழுபாகமும் வழக்கிடை சொத்தாக இருக்கும் பட்சம் கோரிக்கை உரிமையாளரின் கோரிக்கை சட்டப்பூர்வமானதாக அங்கீகரிக்கப்பட்டிருந்தால் ஒருவேளை அதனை நிறைவேற்ற நிறைவேற்று நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் நிறைவேற்று நீதிமன்றத்தில் முதல் முறையாக இது ஒரு பொது குடும்ப சொத்து என claim செய்ய முடியாது என்று AIR 2007 Page 168 Dokisurya Prakash Rao Vs Gopal Krishna Dolai என்ற வழக்கில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. எனவே மேல்முறையீட்டாளரின் தகதா மனு எவ்விதத்திலும் செல்லத்தக்கதல்ல என்ற கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பு உத்தரவு சரியானதே ஆகும். Order 21 Rule 58(5)-ன் படி ஒரு நீதிமன்றம் மனுதாரரின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவர் தனியே வழக்கு தான் தொடர வேண்டும் என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் தனியே வழக்கு தொடர்வதற்கு பதிலாக இந்த மேல்முறையீட்டை செய்துள்ளார்.

இந்து வாரிசுரிமை (திருத்த) சட்டம் 2005, பெண் மக்களுக்கு எப்போது வாரிசுரிமை கிட்டும் என்பதற்கு பல காரணிகளை கூறியுள்ளது. மேற்கண்ட காரணிகளின்படியே பார்த்தாலும் இந்த மனுதாரருக்கு இந்த தாவா சொத்துடன் சேர்ந்து இதர சொத்துக்களிலும் எவ்வித வாரிசு உரிமையும் கிட்டாது என்பது மேலே சொல்லப்பட்ட பல தீர்ப்புகளின் அடிப்படையிலேயே கீழமை நீதிமன்றம் தெளிவாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்கியுள்ளது. மேல்முறையீட்டாளருடன் உடன்பிறந்த நான்கு சகோதரர்களின் குடும்பமும் கீழமேடு ஆசனேரி கிராமத்தில் தான் வசித்து வருகின்றார்கள். எனவே சுமார் 80 வயதான மேல்முறையீட்டாளர் சமூக நிர்பந்தங்களின்படி தேவையான திருமணம், சடங்கு, காது குத்து, வீடு குடிமனை புகுதல், இறப்பு, கருமாதி, ஊர் திருவிழா, குலதெய்வ கோயில் விழா போன்ற எந்த ஒரு விசேசத்திற்கும் அரசநேரி கிராமத்திற்கு வரவே இல்லை என்று கூறுவது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும் இவ்வழக்கு நடந்த காலங்களில் 1ம் எதிர்மேல்முறையீட்டாளரின் மகன் திருமணம், 1ம் எதிர்மேல்முறையீட்டாளரின் மாமியாரும், 2ம் எதிர்மேல்முறையீட்டாளரின் அம்மாவின் மரணம், 1, 2 எதிர்மேல்முறையீட்டாளரின் மகளும், இந்த மேல்முறையீட்டாளரின் சகோதரரின் மகனுக்கும் நடைபெற்ற திருமணம் ஆகிய நிகழ்ச்சிகளுக்கு மேல்முறையீட்டாளர்

வரவே இல்லை என்பதும் ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்றாகும். மேல்முறையீட்டாளர், தனது உடன்பிறந்த சகோதரனின் மகள் 1ம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு உதவவே அவருடன் கூட்டுசதி செய்து இந்த மனுவையும், இந்த மேல்முறையீட்டையும் செய்துள்ளார். இந்த தகதா மனுவாலும், மேல்முறையீட்டாலும் 1ம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய delivery ஒப்படைப்பு தள்ளிப்போகிறதால் 1ம் எதிர்மேல்முறையீட்டாளரே மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார். அதிலும் 2019-ம் ஆண்டு தீர்ப்பு வழங்கப்பட்டு E.P.No. 21/2019 அக நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்து delivery order செய்யப்பட்டு, ஒப்படைப்பு தாமதமாகி E.P.1/2024, 2/2024, 3/2024 மனுக்களான போலீஸ் பாதுகாப்பு, பூட்டை உடைக்க அனுமதி, மின் இணைப்பு துண்டித்தலுக்காக நீதிமன்ற உத்தரவு வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில், 2, 3 எதிர்மேல் முறையீட்டாளர்களுக்கு உதவவே தற்போதுதான் தனக்கு வழக்கு விபரம் தெரியும் என்று E.A. 4/2024, E.A. 5/2024 என தகதா மனு மற்றும் stay petition செய்து 1ம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக செயல்பட்டு வருகிறார். உண்மையில் 2, 3 எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக கீழமை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து delivery செய்ய விடாமல் தடுப்பதே இந்த மேல்முறையீட்டாளரின் நோக்கமாகும்.

உண்மையிலேயே தனக்குரிய பங்கு சொத்தை பெறுவதே உண்மையான நோக்கமெனில் கால விரயம் செய்யாமல் தாவா சொத்துடன் கூடிய இதர சொத்துக்களையும் சேர்த்து மேல்முறையீட்டாளர் partition suit தாக்கல் செய்திருந்தால் அவரது சொத்தில் பாகம் பெறும் நோக்கம் ஒரு வேளை கைகூடியிருக்கும் வாய்ப்பு உண்டு. அதை விடுத்து இந்த மேல்முறையீடு உண்மையில் delivery-ஐ காலதாமதம் செய்யும் நோக்கோடு தான் செய்யப்பட்டுள்ளது. Order 21 Rule 58 ஆனது இந்த மேல்முறையீட்டாளருக்கு பொருந்தாது. Decree holder மற்றும் Judgement debtor-களுக்கு இடையே நடைபெறும் நீதிமன்ற நடவடிக்கைகளில் எழுப்பப்படும் claims/objection-கள் என்பது Judgment debtor or their representative-களால் எழுப்பப்படும் claim/objection-கள் தான் ஒழிய, வழக்கில் எவ்விதத்தில் சம்பந்தப்படாத மூன்றாம் தப்பினருக்கு (third party) அதாவது இந்த மேல்முறையீட்டாளர் மூன்றாம் தரப்பினர் என்ற முறையில் எந்த ஒரு கேள்வியும் ஆட்சேபனைகளும் செய்ய முடியாது என்பதே சட்ட நிலைப்பாடாகும். எனவே இம்முறையீட்டில் மேல்முறையீட்டாளரின் சட்டப்பூர்வமான உரிமையான பங்கை

கோருதல் என்ற வினாவே எழாது. கீழமை நீதிமன்றம் முறையான விசாரணை செய்து இந்த மேல்முறையீட்டாளர்/தகதா மனுதாரரின் கோரிக்கையான தாவா சொத்தில் 1/6 பாகம் பொறுத்து ஒப்படைப்பு இருந்து நீக்கம் என்பதை தள்ளுபடி செய்திருப்பது சரியான நடவடிக்கையே ஆகும். ஏனெனில் இந்த சட்ட நடவடிக்கையில் தனது உரிமையை நிலைநாட்ட மனுதாரருக்கு உரிமை இல்லை என்பதே சட்ட நிலைப்பாடாகும். இந்த மேல்முறையீட்டாளரின் கீழ் நீதிமன்றத்தில் வைத்த கோரிக்கை கீழமை நீதிமன்றத்தால் சரியான முறையில் சட்டவழிகாட்டுதல்படி விசாரணை செய்யப்பட்டு கீழமை நீதிமன்றம் ஒரு சரியான உத்தரவை பிறப்பித்துள்ளது.

கீழமை நீதிமன்றம் இந்த மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த E.A.No. 4/2024-னையும் E.A.5/2025-னையும் தள்ளுபடி செய்திருப்பது சரியான சட்ட நடவடிக்கையாகும். இதன்பேரில் எந்த சட்டப்பூர்வமான இடையூறு நடவடிக்கைகளும் தேவையில்லை. மேலும் இந்த மேல்முறையீட்டாளர் ஒருவேளை தனக்குரிய 1/6 பாகம் கிடைக்கப்பெற்று, அதனை possession எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் தாவா சொத்தின் சட்டப்பூர்வ உரிமையாளரான 1ம் எதிர்மேல்முறையீட்டாளரிடம் delivery செய்யப்பட்டு, அவர் வசம் possession இருந்தால்தான் delivery and possession இந்த மேல்முறையீட்டாளருக்கு சாத்தியமாகும். அதை விடுத்து தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லாத 2, 3 எதிர்மேல்முறையீட்டாளரிடம் possession இருக்கும் பட்சம், இந்த மேல்முறையீட்டாளர் தனது பங்கை delivery & possession பெறுதல் மீண்டும் சட்ட சிக்கல் ஏற்படும். எனவே மேல்முறையீட்டாளர் 1ம் எதிர்மேல்முறையீட்டாளரிடம் delivery & possession கிடைக்காமல் stay செய்யப்பட வேண்டும் என்பதே மேல்முறையீட்டாளரின் நோக்கம் என்பது இந்த கோரிக்கையிலிருந்து நன்கு தெரிய வருவதால் உண்மையல்ல. எனவே மேல்முறையீட்டாளாரும், 2, 3 எதிர்மேல் முறையீட்டாளருமே கள்ளக்கூட்டு செய்து கொண்டு சதி செய்து, இதுபோன்ற தகதா மனுவும், அதன்பேரில் மேல்முறையீடும் செய்து 1-ம் எதிர்மேல்முறையீட்டாளருக்கு கிடைக்க வேண்டிய நீதி கிடைக்க விடாமல் தடுத்து வருவதாலும் மேலே சொல்லப்பட்ட சங்கதிகளின் உண்மைதன்மையாலும், சட்ட நிலைப்பாடுகளின் அடிப்படையில் இந்த மேல்முறையீடு 1ம் எதிர்மேல்முறையீட்டாளரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**6) <u>மேல்முறையீட்டிற்கான காரணங்கள்:</u>**

கீழமை நீதிமன்றம் மனுதாரர் தரப்பில் பிராதுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் 1 முதல் 4 ஆவணங்களை சரிவர பரிசீலனை செய்யாமல் மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்திருப்பது நீதியின் நலனுக்கு முரணாக உள்ளது. கீழமை நீதிமன்றமும் மனுதாரின் தகப்பனார் மற்றும் எதிர்மனுதார்களின் தகப்பனாரின் தகப்பனார் உங்கு என்பவருக்கு பாத்தியமான பூர்வீகச்சொத்தை அனுபவம் செய்து 1986-ம் ஆண்டு இறந்து விட்டதால் பின்பு உங்குவின் மனைவி கண்ணியம்மாள் மற்றும் உங்குவின் வாரிசுகளான கண்ணன்(இறப்பு), முனியாண்டி(இறப்பு), மீனாட்சி (மனுதாரர்), கண்ணன், கண்ணத்தாள், மாணிக்கம் (வாதி) ஆகிய 6 வாரிசுளின் பொதுவான அனுபவத்தில் இருந்து அனுபவம் செய்த சொத்தை எவ்வித பிரிவினையும் செய்யாமல் உங்குவின் மக்களில் மனுதாரர் மீனாட்சி மற்றும் இன்னும் மற்ற பெண் வாரிசுகளையும் உடன்பிறந்ததை மறைத்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து ஒப்படைப்புக்கு உத்தரவாகி உள்ளதை மறைத்து செயல்பட்டதை அறிந்தும் அதனை நீக்கம் செய்ய பரிகாரம் வழங்காமல் மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்திருப்பது நீதியின் நலனுக்கு முரணாக உள்ளது.

கீழமை நீதிமன்றமும் 2003-ம் ஆண்டில் ஆண் வாரிசுகளுக்குள் மட்டுமே நடந்ததாகக் கூறப்படும் ஒரு பதிவு செய்யப்படாத "வாய்மொழிப் பாகப்பிரிவினையை" ஏற்றுக்கொண்டது பெரும் சட்டப்பிழையாகும். ஒரு மகளின் பூர்வீக சொத்துரிமையை, குறிப்பாக இந்து வாரிசுரிமை (திருத்த) சட்டம், 2005-ன் நோக்கங்களுக்கு எதிராக, இது போன்ற ஒருதலைப்பட்சமான மற்றும் ஆவணப்படுத்தப்படாத பாகப்பிரிவினையின் மூலம் பறிக்க முடியாது என்பதை நீதிமன்றம் கவனிக்கத் தவறிவிட்டது நீதியின் நலனுக்கு முரணாக உள்ளது. கீழமை நீதிமன்றமும், வினீதா சர்மா -எதிர்- ராகேஷ் சர்மா (2020) 9 SCC 1 என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் வகுத்துள்ள சட்டக் கொள்கையை கீழ் நீதிமன்றம் தவறாகப் புரிந்து கொண்டுள்ளது. வாய்மொழிப் பாகப்பிரிவினை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமானால், அது ஒரு நீதிமன்றத் தீர்ப்பாணை போல இறுதியாக உறுதிப்படுத்தப்பட்டு, பொது ஆவணங்களால் ஆதரிக்கப்பட வேண்டும். வருவாய் பதிவேடுகளில் பட்டா மாற்றம் செய்வது மட்டுமே சட்டப்பூர்வமான பாகப்பிரிவினையாகாது அல்லது. உரிமையை வழங்காது என்பதை நீதிமன்றம் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது நீதியின் நலனுக்கு முரணாக உள்ளது.

கீழமை நீதிமன்றமும், மேல்முறையீட்டாளர் தரப்பாக இல்லாத முந்தைய வழக்கு நடவடிக்கைகளில், இந்த வாய்மொழிப் பாகப்பிரிவினை "ஏற்றுக்கொள்ளப்பட்டது" என்று கீழ் நீதிமன்றம் கண்டறிந்தது சட்டப்படி தவறானதாகும். மேல்முறையீட்டாளரைக் கட்டுப்படுத்தாத ஒரு தீர்ப்பின் அடிப்படையில், அவரது பிறப்புரிமையை மறுப்பது இயற்கை நீதிக்கு முரணானது. ஒரு வழக்கில் தரப்பாக இல்லாத ஒருவரை அந்த வழக்கின் தீர்ப்பு கட்டுப்படுத்தாது (Res inter alios acta) என்ற அடிப்படைக் கொள்கையை நீதிமன்றம் மீறியுள்ளதும் நீதியின் நலனுக்கு முரணாக உள்ளது. கீழமை நீதிமன்றமும், பூர்வீக சொத்தைப் பொறுத்தவரை, ஒரு கூட்டாளியின் சுவாதீனம் என்பது அனைத்து கூட்டாளிகளின் சுவாதீனமாகக் கருதப்படும் என்ற சட்டக் கொள்கையை கீழ் நீதிமன்றம் புறக்கணித்துள்ளது. திருமணத்திற்குப் பிறகு மேல்முறையீட்டாளர் வேறு இடத்தில் வசித்தாலும், அவர் சொத்தின் "ஆக்கப்பூர்வமான சுவாதீனத்தில்" (Constructive Possession) இருந்தார். அவரை சட்டப்பூர்வமாக சொத்திலிருந்து வெளியேற்றியதற்கான (Ouster) ஆதாரங்களை எதிர்மனுதாரர்கள் நிரூபிக்கத் தவறிய நிலையில், "கூட்டு சுவாதீனத்தை" நிரூபிக்க வேண்டிய சுமையை மேல்முறையீட்டாளர் மீது சுமத்தியது தவறானதாகும்.

கீழமை நீதிமன்றமும், மேல்முறையீட்டாளர், சர்வே எண் 20/3 -ல் உள்ள முழு சொத்திலும் தனது பங்கைக் கோராமல், வழக்கு சொத்தில் மட்டுமே 1/6 பங்கைக் கோரியுள்ளார் என்ற தொழில்நுட்பக் காரணத்திற்காக மனுவைத் தள்ளுபடி செய்தது ஏற்றுக்கொள்ள முடியாது. சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு XXI விதி 58-ன் கீழ், ஒரு உரிமைகோரிக்கையாளரின் உரிமை, பாத்தியதை மற்றும் நலனை விசாரிக்கும் பரந்த அதிகாரம் நிறைவேற்று நீதிமன்றத்திற்கு உள்ளது. ஒரு தொழில்நுட்பப் பிழைக்காக, ஒருவரின் அடிப்படை சொத்துரிமையை மறுப்பது நீதியின் தோல்வியாகும். கீழமை நீதிமன்றமும், இந்து வாரிசுரிமை (திருத்த) சட்டம், 2005-ன் தாக்கத்தை கீழ் நீதிமன்றம் முழுமையாகக் கருத்தில் கொள்ள தவறிவிட்டது. இந்தத் திருத்தத்தின் முக்கிய நோக்கமே, மகள்களுக்கு எதிரான பாகுபாட்டை நீக்கி, அவர்களைப் பிறப்பிலிருந்தே மகன்களைப் போலவே சமபங்குதாரர்களாக ஆக்குவதாகும். இந்த சட்டத்தின் நோக்கத்தையே சிதைக்கும் வகையில், ஆண் வாரிசுகளுக்குள் நடந்ததாகக் கூறப்படும் வாய்மொழிப் பாகப்பிரிவினைக்கு சட்ட அங்கீகாரம் அளித்தது தவறானது.

கீழமை நீதிமன்றமும் மேல்முறையீட்டாளருக்கு வழக்கு நடவடிக்கைகள் குறித்து முன்னரே தெரியும் என்ற எதிர்மனுதாரர்களின் வாதத்தை, உறுதியான ஆதாரங்கள் இல்லாமல் கீழ் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது அனுமானத்தின் அடிப்படையிலானது. கூட்டு சதி மற்றும் மோசடி குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்ட நிலையில், தாமதம் என்ற காரணத்தைக் கூறி ஒருவரின் பூர்வீக சொத்துரிமையை முழுமையாகப் பறிப்பது நியாயமற்றது. கீழமை நீதிமன்றமும் சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு XXI விதி 58-ன் கீழ் தாக்கல் செய்யப்படும் ஒரு மனுவானது, நிறைவேற்று நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் மூன்றாம் தரப்பினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர், ஒரு சட்டப்பூர்வ வாரிசுதாரராக தனது பங்கைக் கோரும்போது, அவரது உரிமையை முழுமையாக விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டிய கடமையிலிருந்து கீழ் நீதிமன்றம் தவறியுள்ளது.

கீழமை நீதிமன்றமும் மேல்முறையீட்டாளரின் மனுவை பரிசீலனை செய்து முறையான விசாரணை நடத்தி மேல்முறையீட்டாளருக்கு சேர வேண்டியதாய் நிறைவேற்றுதல் மனுச்சொத்து விபரத்தில் கண்ட சொத்தில் இந்து வாரிசுரிமைச்சட்டத்தின் படி வழக்கு சொத்தில் 1/6 பாகத்தை பொறுத்து ஒப்படைவில் இருந்து நீக்கம் செய்யாமல் மனுவை நிராகரித்து தள்ளுபடி செய்திருப்பது நீதியின் நலனுக்கு முரணாக உள்ளது. கீழமை நீதிமன்றத்தில் மனுதாரருக்கு ஒப்படைவு விபரமும் 10.04.2023. ல் தெரிய வந்தவுடன் தனது சேரவேண்டிய 1/6 பங்கினை நிறைவேற்று நடவடிக்கையிலிருந்து விடுவிக்கவும், தனது உரிமை கோரிக்கை மனு மீது தீர்வு காணும் வரை மேற்படி மேல்முறையீட்டாளர் தரப்பில் இ.பி.21/2019 ன் கீழ் தாக்கல் செய்த (இ.ஏ.எண்: 04/2024 (உரிமை கோரிக்கை மனு) ஆகியவற்றை சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு XXI விதி 58 மற்றும் பிரிவு 151-ன் கீழ்) மனுவை பொறுத்து இறுதி தீர்ப்பு ஏற்படும் வரை நடவடிக்கையை மேல் நடத்தா வண்ணம் Stay செய்து வைக்காமல் மனுதாரின் மனுவை தள்ளுபடி செய்திருப்பது நீதியின் நலனுக்கு முரணாக உள்ளது.

கீழமை நீதிமன்றத்தில் 1ம் எதிர்மனுதார் மற்ற வாரிசுகளுடன் கூட்டுசதி செய்து மனுதாரின் பங்கினை அபகரிக்கும் நோக்கில் அசல்வழக்கு எண். 150/2016 ஐ தாக்கல் செய்து ஒருதலைப்பட்சமான தீர்ப்பாணை பெற்று, மேற்படி தீர்ப்பாணையை நிறைவேற்ற இ.பி.21/2019 தரக்கல் செய்ததில், மேற்படி மேல்முறையீட்டாளர் தரப்பில்

இ.பி.21/2019 ன் கீழ் (இ.ஏ. எண்:04/2024 (உரிமை கோரிக்கை மனு) தாக்கல் செய்து இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்து கடந்த 09.10.2025 தேதியிட்ட உத்தரவின் மூலம் இரண்டு மனுக்களையும் தள்ளுபடி செய்திருப்பது நீதியின் நலனுக்கு முரணாக உள்ளது. ஆகவே, சிவகங்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இ.ம.எண்.21/2019ல் (இ.ஏ. எண்: 04/2024 (உரிமை கோரிக்கை மனு) 09.10.2025 ம் தேதி பிறப்பித்த உத்தரவினை ரத்து செய்து இம்மேல்முறையீட்டை அனுமதித்து மேல்முறையீட்டாளரின் மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

7) **<u>பிரச்சினை</u>**-

மேல்முறையீட்டாளர் தரப்பு மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்?

**8)** இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

9) **<u>பிரச்சினைக்கான தீர்வு-</u>**

தாவா மேல்முறையீடானது சிவகங்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் O.S.No.150/2016 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பை நிறைவேற்றும் மனுவான E.P.No.21/2019-ல் மேல்முறையீட்டாளர் உரிமை கோரல் மனுவான E.A.No.4/2024 ஐ தாக்கல் செய்து நிறைவேற்ற மனுவில் ஒப்படைப்பு கேட்கப்பட்ட சொத்தில் மேல்முறையீட்டாளருக்குரிய 1/6 பங்கு பாக சொத்தை விலக்கி ஒப்படைப்பு செய்திட வேண்டும் என்ற மனுவானது தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**10**) மேல்முறையீட்டாளரும், நிறைவேற்று மனுவின் மனுதாரரும் உடன் பிறந்தவர்கள் என்றும் மேற்படி இருவருடன் மேலும் 4 பேர் உங்கு என்பவரின் வாரிசுதாரர்கள் என்றும் மேற்படி உங்கு என்பவருக்கு சர்வே எண்.20/3 என்ற சொத்து பூர்வீக சொத்து என்றும் மேற்படி சொத்தினை நிறைவேற்று மனுதாரரும் அவருடன் பிறந்த 3 ஆண் வாரிசுகளும் சேர்ந்து வாய்மொழியாக 2004-க்கு முன்பே வாய்மொழி பாகப்பிரிவினை செய்து கொண்டதாக சொல்லி பட்டா பெயர் மாற்றம் செய்துள்ளதில் தாவா மேல்முறையீட்டாளருக்குரிய பங்கு சொத்தை மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை கட்டுப்படுத்தாது என்று மேல்முறையீட்டாளர் தரப்பில் சங்கதி தெரிவிக்கப்பட்டும் அதன் அடிப்படையில் தாவா நிறைவேற்று மனுவில் கண்ட சொத்தில் மேல்முறையீட்டாளருக்கு 1/6 பங்கு பாக உரிமை உள்ளதாக வாதம் புரியப்பட்டது.

**11**) O.S.No.150/2016 வழக்கின் வாதி நிறைவேற்று மனுவின் மனுதாரர் ஆவார். அவருடைய தந்தை உங்கு என்பவருக்கு பாத்தியமான சர்வே எண்.20/3 சொத்தில் நிறைவேற்று மனுதாரருக்கு கிடைத்த பாகச்சொத்தைப்பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி O.S.No.150/2016 தாக்கல் செய்து நிறைவேற்று மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பு பெற்றும் மேற்படி தீர்ப்பினை மாண்பமை உயர்நீதிமன்றமும் உறுதி செய்து தீர்ப்பு வழங்கி அதன் பேரில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து சொத்தின் Delivery-க்காக வழக்கு நிலுவையில் உள்ளது என்ற சங்கதி இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதி ஆகும்.

**12**) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள AIR 1992 Madras 111 & 112, AIR 2004 P & H, page 210 ஆகிய வழக்கின் தீர்ப்பு சங்கதி தாவா வழக்கிற்கு பொருந்தாத ஒன்றாகும். ஏனெனில் O.S.No.150/2016 வழக்கில் மேல்முறையீட்டாளர் ஒரு தரப்பினர் அல்ல. மேலும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள (2008) 66 AIC 676 (Cri), 1993 SUPP (1) SCC 233 என்ற முன்தீர்ப்பு வழக்கு சங்கதிகளும் வினிதா சர்மா /எதிர்/ ராகேஷ் சர்மா 2020(9) SCC 1 என்ற முன்தீர்ப்பிற்கு பிறகு தாவா வழக்கு சங்கதியைப் பொறுத்து ஏற்புடைய ஒன்றல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**13**) வினிதா சர்மா /எதிர்/ ராகேஷ் சர்மா 2020(9) SCC 1 என்ற வழக்கு முன்தீர்ப்பின் அடிப்படையில் ஒரு தந்தையின் பூர்வீக சொத்தில் ஒரு பெண்வாரிசு பிறப்பால் பங்குரிமை பெற்றவராகிறார் என்ற மேல்முறையீட்டாளர் சங்கதி ஏற்புடைய ஒன்றாகும். மேற்படி பெண் வாரிசு ஒரு தந்தையின் சொத்தின் பாக உரிமை பெற வேண்டுமெனில் மேற்படி சொத்து 20.12.2004-க்கு முன்பு பதிவு செய்யப்பட்ட ஒரு பாகப்பிரிவினை பத்திரம் மூலமோ (அல்லது) நீதிமன்ற தீர்ப்பாணையின் பேரிலோ உரிமை மாற்றம் ஏற்பட்டிருக்க கூடாது என்ற மேல்முறையீட்டாளர் வாதமும் ஏற்புடைய ஒன்றாகும்.

**14**) மேற்படி வினிதா சர்மா /எதிர்/ ராகேஷ் சர்மா என்ற முன் தீர்ப்பு சங்கதியின் பேரில் தாவா சொத்தினைப் பொறுத்து மேல்முறையீட்டாளர் தனக்குரிய 1/6 பங்கு பாக

உரிமை சொத்தை ஒப்படைப்பின்போது விலக்கிட வேண்டும் என்ற பரிகாரம் குறித்து பார்க்கையில் மேல்முறையீட்டாளர் கோரிடும் பாக உரிமை சொத்தானது உங்கு என்பவருக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.20/3-ல் கட்டுப்பட்ட முழு சொத்து அல்ல என்றும் பாக உரிமை பரிகாரம் கேட்டிடும் ஒரு நபர் தனக்கு பாக உரிமை உள்ள முழு சொத்தையும் குறிப்பிட்டு பாகம் கேட்டிட வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அது பகுதி பாக பரிகாரம் (Partial Partition) தோஷத்திற்கு உள்ளாகிடும் என்ற ஆட்சேபணை ஏற்புடைய ஒன்றாகவே உள்ளது. மேற்படி சங்கதி குறித்து நிறைவேற்று நீதிமன்றம் சர்வே எண். 20/3 சொத்து முழுமைக்கும் பாக பரிகாரம் கேட்டிடாமல் நிறைவேற்று மனுதாரர் அதன் பகுதி சொத்தைப் பொறுத்து மட்டும் பாக பரிகாரம் கேட்டிடுவது ஏற்புடையதல்ல என்று சரியாகவே முடிவு கண்டுள்ளது. மேலும் தாவா நிறைவேற்று மனு சொத்தானது தற்போது நிறைவேற்று மனுதாரர் வசம் இல்லாமல் O.S.No.150/2016 வழக்கின் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து அவர்கள் வசம் உள்ள நிலையிலும் மேற்படி O.S.No.150/2016 வழக்கின் பிரதிவாதிகள் வசம் உள்ளதாக சொல்லப்படும் சொத்தில் மேல்முறையீட்டாளருக்கு பாத்தியம் உள்ளது என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்திடாத நிலையில் மேற்படி பிரதிவாதிகள் வசம் ஆக்கிரமிப்பு சொத்தாக தற்போதைய நிலையில் உள்ள தாவா நிறைவேற்று மனு சொத்தைப் பொறுத்து மேல்முறையீட்டாளர் கோரிக்கை ஏற்புடையதல்ல என்ற நிறைவேற்று மனுதாரர் வாதம் ஏற்புடைய ஒன்றாகும்.

**15**) கட்டளை 21 விதி 58 -ன் கீழ் தாக்கல் செய்யப்படும் மனவானது மேற்படி நடவடிக்கையின் தரப்பினர்களுக்கிடையேயோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்குள்ளோ தாக்கல் செய்யப்படவேண்டும் என்றும் மேல்முறையீட்டாளர் மேற்படி தரப்பினர்களில் ஒருவர் அல்ல என்றாலும் சட்டப்பிரிவு தவறு என்பதற்காக மேல்முறையீட்டாளர் உரிமை பாதிக்கப்படக்கூடாது என்று விசாரணை நீதிமன்றம் சரியாகவே முடிவு கண்டுள்ளது. அந்த வகையில் மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்துள்ள 2022 SCC online 163 தாவா வழக்கிற்கு பொருந்துவதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்துள்ள AIR 1957 SC 314 என்ற முன்தீர்ப்பு சங்கதியின்படி பூர்வீக சொத்தை பொருத்தவரை ஒரு கூட்டாளியின் சுவாதீனம்

என்பது அனைத்து கூட்டாளிகளின் சார்பான சுவாதீனமாக கருதப்படும் என்ற சங்கதி ஏற்புடையது என்றாலும் மேற்படி முன்தீர்ப்பானது தாவா வழக்கு சங்கதிக்கு பொருந்தாது. ஏனெனில் தாவா நிறைவேற்று மனு சொத்தானது O.S.No.150/2016 வழக்கின் பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பில் உள்ளது என்றும் அதன் பேரில் விளம்புகை பரிகாரமானது நிறைவேற்று மனுதாரருக்கு ஆதரவாக பிறப்பிக்கப்பட்டு மேற்படி சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைப்பு பெறுவதற்காகவே தாவா நிறைவேற்று மனு நிலுவையில் உள்ளது என்ற சங்கதி மேல்முறையீட்டாளரும் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் தாவா நிறைவேற்று மனுவின் சுவாதீனம் மேல்முறையீட்டாளர் வசம் ஆக்கப்பூர்வமான சுவாதீனத்தில் இருப்பதாக கருதப்பட வேண்டும் என்ற வாதம் ஏற்கும்படி இல்லை. மேற்படி சங்கதி குறித்து கீழமை நீதிமன்றம் சரியாகவே தீர்மானித்துள்ளது.

**16**) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பான்லர்சிங் எதிர் பூரான் தீர்ப்புகள் வினிதா சர்மா வழக்கிற்கு பின்பு முக்கியத்துவத்தை இழந்துவிட்டதாகவும் வினிதா சர்மா வழக்கின் தீர்ப்பே தற்போது நடைமுறையில் உள்ள சட்டமாகும் என்ற மேல்முறையீட்டாளர் தரப்பு வாதம் ஏற்கும்படி உள்ளது. மேலும் 1ம் எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ள யோகி சூர்யா பிரகாஷ்ராவ் எதிர் கோபால் கிருஷ்ணா டோலாய் AIR 2007 ஒரிசா 168 என்ற முன்வழக்கு தீர்ப்பானது தாவா வழக்கு சங்கதிக்கு பொருந்தாது என்ற மேல்முறையீட்டாளர் தரப்பு வாதம் ஏற்கும்படி உள்ளது. ஏனெனில் O.S.No.150/2016 வழக்கில் மேல்முறையீட்டாளர் ஒரு தரப்பினர் அல்ல என்பதாலே ஆகும். மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்துள்ள 1996 (6) SCC 233 என்ற முன் தீர்ப்பு சங்கதியான வருவாய்த்துறை பதிவேடுகளின் பெயர் மாற்றமானது உரிமைமூல பாத்தியத்தை கொடுத்திடாது என்ற மேல்முறையீட்டாளர் தரப்பு வாதம் ஏற்கும்படி உள்ளது. மேலும் 2007 (13) SCC 421 என்ற முன்தீர்ப்பு சங்கதியின்படி அசல் வழக்கில் தரப்பினராக இல்லாத ஒருவரை அந்த வழக்கில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணை கட்டுப்படுத்தாது என்றாலும் அந்த நபர் சட்டத்தில் உள்ள மற்ற தீர்வழிகளில் பரிகாரம் கேட்டிட இயலும் என்ற மேல்முறையீட்டாளர் தரப்பு வாதம் ஏற்புடைய ஒன்றே.

**17**) மேற்சொன்ன முன்தீர்ப்பு சங்கதிகள் சட்டத்தின் அடிப்படையான ஷாரம்சத்தை எடுத்துக்கூறினாலும் தாவா மேல்முறையீட்டாளர் கோரிக்கையானது ஏற்புடையதா? என்பது குறித்து பார்க்கையில் உங்கு என்பவரின் வாரிசு 1ம் எதிர்மனுதாரர் மற்றும் மேல்முறையீட்டாளர் மற்றும் 4 நபர்கள் என்பதும் மேற்படி உங்கு என்பவரின் பூர்வீக சொத்து சர்வே எண்.20/3 என்பதும் மேற்படி சர்வே எண்.20/3 முழு சொத்தின் ஒருபகுதி தான் தாவா நிறைவேற்று மனு சொத்து என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும்.

**18**) பாகப்பிரிவினை பரிகாரம் கோரிடும் வழக்குகளில் பாகம் கோரிடும் முழுச்சொத்தின் விபரம் குறிப்பிடப்படவேண்டும் என்றும் மேலும் மேற்படி பாகப் பாத்திய சொத்தில் உரிமையுள்ள நபர்கள் அனைவரும் அவசியமான தரப்பினர்கள் (necessary party) என்றும் மேற்படி அவசிய தரப்பினர்களும், முழுமையான சொத்தும் ஒரு வழக்கில் இருக்கும் சூழலில் பாக உரிமை கோரிடும் நபருக்கான சரியான பாக உரிமை சொத்து குறித்து தீர்மானித்திட முடியும் என்றும் தாவா நிறைவேற்று மனுவில் குறிப்பிடப்பட்ட சொத்து சர்வே எண்.20/3-ன் ஒரு பகுதி சொத்து என்றும் மேற்படி சொத்தும் O.S.No.150/2016 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பில் உள்ளது என்றும் மேற்படி சொத்தில் 1/6 பங்கு பாக உரிமை சொத்தினை விலக்கிட கேட்டிடும் மேல்முறையீட்டாளர் மேற்படி சொத்திற்கு அவசியமான தரப்பினர்கள் இன்றியும் மேற்படி ஆக்கிரமிப்பு சொத்தில் மேல்முறையீட்டாளருக்கு எந்த வகையில் தற்போதைய சூழலில் பாத்தியம் உள்ளது என்பதற்கு ஆதரவின்றியும் தாவா கோரிக்கை மனு தாக்கல் செய்துள்ளதாலும் மேற்படி நிறைவேற்று மனு சொத்தானது நிறைவேற்று மனுதாரருக்கு பாத்தியம் என நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பாணை ரத்து செய்யப்படவோ, மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மாற்றம் செய்யப்படவோ இல்லை என்பதால் தற்போதைய சூழலில் மேல்முறையீட்டு மனு பரிகாரம் மேல்முறையீட்டாளருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் விசாரணை நீதிமன்றம் சரியான வகையிலேயே தீர்மானித்து உத்தரவிட்டுள்ளது என்றும் 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பு வாதம் ஏற்புடைய ஒன்றே என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து தாவா மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிட தீர்மானம் செய்கிறது.

முடிவாக, இந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டு, சிவகங்கை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.150/2016 என்ற வழக்கில் E.P.No.21/2019-ல் 09.10.2025ம் தேதி பிறப்பித்த உத்தரவு மற்றும் உத்தரவாணை உறுதி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

PANDY R Digitally signed by PANDY R Date: 2026.03.10 17:39:55 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை

மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணம் : இல்லை

PANDY R Digitally signed by PANDY R Date: 2026.03.10 17:40:04 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை

Subordinate Court,
Sivagangai
C.M.A.No.1/2026 in
E.A.No.4/2024 in
E.P.No.21/2019 in
O.S.No.150/2016
Fair Order
10.03.2025